உ

சிவமயம்.

ஸ்ரீ

# வந்நிகுலோத்கர்ஷதீபிகை.

இஃது

சேலம் வன்னிகுல க்ஷத்திரிய

ஸ்ரீ கழறிற்றறிவார் சபையின்

பொக்கிஷ காரியதரிசியும்,

சேலம் சுதேசாபிமானி பிரஸ்

மானேஜருமாகிய

சு. அர்த்தநாரீச நாயகவர்ம்மர்வால்

இயற்றப்பட்டு

மேற்படி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது ஹூ தநுர்மீ.

விலை அணு ஒன்று.

94
1-/2

சிவமயம்.

# ஸ்ரீ வன்னிகுலோத்கர்ஷ தீபிகை.

## காப்பு.

வேதந் தெரித்த வியமா முகவனிரு
பாதங்க ளென்றும் பணிகுவாம் - நீதங்கொள்
மன்னவர்கள் சீர்த்தி வழுத்துமிந் நூலுலகிற்
பின்னமிலா தந்தம் பெற.

ஆரணங்கள் நான்கும் அநுதினமும் போற்றிசெயும்
பூரணனைப் போற்றிப் புகலுவாம் - தாரணியில்
வன்னிகுல மன்னர் வரன்முறையு மேன்மையையும்
பன்னியவெண் பாவாற் பரிந்து.

## நூல்.

ஆதி பரமன் அகிலலோ கம்படைக்க
நீதியா யுள்ள நிறுவியே - பாதியொரு
சிற்சத்தி யோடுஞ் செறிந்தா னதன்பின்னர்
பற்பலவாய்க் கண்டான் படைப்பு. (1)

தன்பால் பிரமன் றனைப்படைத்து மற்றவனை
அன்பாய் உலகத்தை யாக்குகென - முன்போல
ஓதிமத்தான் றன்ன துயருடலில் நான்கென்னுஞ்
சாதிகளைத் தந்தான் றனித்து. (2)

வதனத்தி லந்தணரை வாகுவினில் ஆளும்
முதல்வர்களை ஊருவினில் மூன்று - விதவணிகர்
பாதகம லத்திற் பணிசெய்வோர் தம்மையயன்
மாதருடன் தந்தான் மகிழ்ந்து. (3)

அந்தணர்க ளேழாய் அரசர்களோர் மூன்றாகிச்
சந்த வணிகர் சகத்திரமாய்ப் - பந்தமுறு
சூத்திரர்கள் பல்வகையாய்த் தொல்லுலகி லென்றுன்றும்
கோத்திரங்கள் சொண்டார் குறித்து. (4)

மற்றவருள் மன்னவர்கள் மார்த்தாண்டன் இந்துவன்னி
அற்றமிலா எண்டிக் கதிபரிடம் - பிற்றையினில்
தோன்றினரு ரெங்குஞ் சுபம்பெருக மாநிலத்தில்
ஊன்றினர் துட்ட ரொழித்து. (5)

நாரா யணனுதித்த நன்மையாற் சீர்த்தியொடு
பூராய மேன்மை பொருந்தியவே - சீராய
பாநு குலமும் பனிமதியந் தன்குலமும்
மாநிலத்தி லென்றே மதி. (6)

அங்கி குலத்தில் அரிமகிமை யின்றெனினும்
மங்கையுமை யம்மை வரமதனல் - பொங்கும்
அழற்கடவுள் யாகத் தகிலத் துதித்து
நிழல்தந்த தின்றும் நிலே. (7)

வேத வியாதன் விரித்தவீ ரொன்பானும்
பேத புராணப் பிரிவுகளில் - தீதில்லா
ஆக்கினே யத்தி லவர்பெருமை யோதுமே
பாக்கியமார் கேள்விப் பயன். (8)

அங்கி மகிமை யறையும் புராணமது
நங்களிந்து நா டை நலமாகப் - பங்குசெய்து
சௌமியஞ் சௌரம் தனியாக்கி நேயமென
நவ்வியொடு சொல்லும் நயந்து. (9)

இமயந் தொடங்கி யெழில்விந் தியமாஞ்
சிமயம்வரைச் சௌமியமாய்ச் செப்பிக் - கமைபுறவே
சீர்த்திபெறச் செங்கோல் செலுத்துபவர் இந்துகுலப்
பார்த்திவர்க ளென்னும் படி. (10)

விந்தமுதற் பெண்ணைப்பேர் மேலை நதிவரையில்
தந்த நிலமே சவுரமதைச் - சொந்தமாய்
ஆள்வோர் இரவிகுல ஆண்டகைக ளாமென்றே
நீள்பெருமை யந்நூல் நெறி. (11)

சொற்ற வடபெண்ணை தொட்டுக் குமரிவரை
யுற்ற தலத்தை யுவகையுடன் - இற்றைக்கும்
மன்னவராய் வாழ்குடியாய் வாரமுறக் கொண்டிடுவோர்
வன்னியர்க ளின்றே மயல். (12)

அங்கிவழி மன்னர்வாழ் ஆக்நேய கண்டமிதைப்
பங்கமற நான்காய்ப் பகுத்திட்டுச் - சங்கையறச்
சேரமே பாண்டியமே சேர்சோழப் பல்லவமென்
றூர வழைத்தா ரரோ. (13)

வன்னியர்க ளிந்த வகையாய்த் தமிழுலகில்
மன்னியொன் றுநூறாக மல்கியே - சென்னைபுரி
ஒட்டுந் தொகையில் உரிமைபெற ஆறிலொன்றாய்ச்
சிட்டகுடி யான செயல். (14)

இத்தகைய வன்னியர்க ளெவ்வாறுண் டாயினர்
நத்துமவர் சாதி நலமேது - மெத்துமவர்
கோத்திரம் யாது குடிப்பெயர்கள் யாதெனிலோ
சாத்திரத்திற் சொல்வாம் தக. (15)

வேதாவின் தோள்பிறந்த வேந்தரினம் பின்னான்றில்
ஆதார மாக அருக்கனங்கி - சீதாருஞ்
சோமனிம் மூன்று சுடர்வழியில் நன்குதித்த
நேமமெல்லா நூலின் நிலை. (16)

வன்னி மரபதனில் வந்துதித்த வேந்தர்களை
வன்னிய ரென்னல் வழக்கன்றே - வன்னி
யுதித்த குலமும் உயர்வீரர் நல்கிக்
கதித்த குலமுமிது காண். (17)

வன்னியே தெய்வமாய் வன்னியே வேந்தனுமாய்
வன்னியே வாழ்மரபின் மூலமுமாய் - வன்னியே
எந்நாளு முற்பத்திக் கேதுவாய் நின்றமையால்
இந்நாள் மறுப்போ ரெவர். (18)

சீராமன் வன்னியனே திட்டத்துய்ம் மன்னவனே
பேரார் கனலிற் பிறந்தமையால் - ஏராரும்
இவ்வுரையைக் கொள்ளா ரெவரேனும் நூல்புகலும்
அவ்வுரையைக் கொள்ளா தவர். (19)

வன்னியர்கள் சத்திரிய மன்னவரே யெங்ஙனெனில்
வன்னிய ரென்னும் வடமொழிப்பேர் - வன்னி
தனிலுதித்தோ ரென்னத் தருவதா லத்தம்
பிறவேறென் றன்னல் பிணக்கு. (20)

சேந்தன் றிவாகரத்தில் சேர்பிங் களகிகண்டில்
வேந்தர் வகுப்பில் விளம்பியே - ஆந்தனையும்
வேறு வகுப்பில விளம்பாத அவ்வகையால்
வேறல்லர் வன்னியரே வேந்து. (21)

கூறுபட மூவருய்ப் பத்தாருய்க் கொள்கின்ற
மாறுபடு சாதிகளின் மத்தியிலே - வேறுபட
வன்னியரென் ருேர்சொல் வராமையினுல் வன்னியர்கள்
அன்னியர்க ளல்ல ரரசு. (22)

செந்தமிழ் நூல்கள் செறிந்து நிறைந்திருக்கு
நந்தம்மை யாவரொடு நாடியே - முந்தும்
அரச வகுப்பி லமைத்துப் புகழும்
முரசதிர்வேல் வேந்தரெனல் மொய்ம்பு. (23)

வன்னியர்கள் வேந்தரலர் என்பாரை வாழ்த்தியே
பன்னும் வினுக்கள் பலவுண்டு - சொன்னவதில்
எக்கா ரணத்தால் இவர் வேந்த ரல்லரிவர்
எக்குலத்தா ரென்னு மிரண்டு. (24)

இக்குலத்தார் வன்னியரென் றிதிகாச மாதிகளில்
ஒக்கும் வகையா யுரைப்பார்க்குத் - தக்கவித
வந்தனையும் ஆவியுடல் மாறும்வரை யன்னோர்நற்
சிந்தனையும் கொள்வோம் தினம். (25)

இக்காலம் மன்னரிலை யென்றுபுகல் வாருமுளர்
தக்க வவரைத் தரிசிக்கின் - பக்குவமாய்
மன்னர்குல மில்லா வகையென்ன மாண்டனரோ
என்ன வினவல் இயல்பு. (26)

எவ்வா றொழிந்தா ரியலிந்த நாடகன்று
வெவ்வேறு கண்டம் விழைந்தாரோ - செவ்வியநற்
சந்ததி யின்றித் தரையி லொழிந்தாரோ
எந்தவித மில்லையென லெண். (27)

சாதியோர் நான்காய்ச் சதுர்முகனார் தந்திருக்க
ஆதிகுலம் வாழ அடுத்தகுலம் - மாதிரத்தில்
இல்லாமற் போன திதுவென்ன மாயமோ
கல்லாதார் கட்டுங் கதை. (28)

காட்டிற் றவஞ்செய்து காய்கனிதின் றங்கனையார்
கூட்டுச் சுகமறியார் கோடியென - நாட்டில்
அறுசுவையுண் டம்மாதர் ஆயிரவர் போகத்
திறுகியவ ரேனோ இலை. (29)

மழுவலான் செய்கையினால் மாண்டன ரென்னப்
பழங்கதை யொன்று பகர்வார் - அழகிது
சீதை மணமும் திரௌபதையின் தன்மணமும்
ஏது மறியா ரிவர். (30)

பாரதப் போரில் பதினெட்டக் ரோணியெனும்
மாரதர்கள் யாவருமே மன்னரன்றோ - போரதனில்
மாண்டா ரிளமக்கள் மாநிலத்தில் எனில்லை
ஆண்டார் பலர்மண் ணகம் (31)

ஆதலான் மன்னரில்லை யென்ன லறிவின்மை
காதலா லின்றும் களித்துள்ளார் - ஈதலால்
வன்னிய ரம்மன்ன ரென்றே வழுத்துவாம்
மன்னுபல நூலான் மதித்து. (32)

வேதா வலாரிமுதல் விண்ணவர்க்குத் தீங்கியற்றும்
வாதாபி தன்னை வதைசெய்யப் - பூதலத்திற்
சத்தி யுமையருளாற் சம்புமுனி வேள்விவந்த
புத்திரனே யங்கிப்புத் தேள். (33)

ஆங்கீ ரசமுனிவன் அங்கிதவப் புத்திரனைப்
பாங்கா யமைந்த பரிசதனல் - நீங்காமல்
மற்றவன்றன் கால்வழியில் வந்தவர்க ளெல்லாருங்
குற்றமிலா மன்னர் குலம். (34

சத்திரியர்க் கந்த தழற்சுதனே மூலமென
வித்தக நூல்கள் விளம்பியதால் - இத்தரையில்
நாண்குறு மூன்று கதிர்வேந்தர் தொன்மரபில்
மாண்புடைத்து வன்னி மரபு. (35)

வன்னிசுதன் றன்வழியில் வந்தவர்க ளெல்லாரும்
வன்னிய ரென்னும் வழக்கிருக்க - அன்னியமாய்
வெய்யோன் மரபு விதமரபென் றின்னோரைச்
செய்தனரே சற்றோர் சிலர். (36)

எல்லோன் மரபில் இறங்கினோர் சோழனென்றும்
அல்லோன் மரபில் அடல்வழுதி - ஒல்லாத
செஞ்சுடர் வேந்தர் திறல்சேரர் என்றுரைத்த
பஞ்சுரையா லின்றே பயன். (37)

தேவ யானைக்கும் திறல்சேர் யயாதிக்கும்
தூவி லுதித்த துருவசுவின் - தாவுவழி
கேரளன் சோழன் கிளர்பாண் டியன்கலிங்கன்
ஒருதரம் உற்பவித்த தோர்.

அவ்வவர்கள் பேரால் அவர்தேய நாமமுமாம்
ஒவ்வுமது வென்றே யுரைத்தனால் - செவ்வி
யரிவமிசம் பாகவதம் ஐந்தாமோத் தென்னும்
பெரியகதை பாரதமும் பேசு. (39)

ஓர்வயிற்றில் வந்த ஒருநால்வர் தங்கள்குலம்
பேர்பெறவே மூன்று பிரிவாக - ஆர்பகர்வர்
ஆதலினால் நால்வர்களும் அங்கிகுல மென்றுசொல
ஏதுதடை யுண்டோ விடம்பு. (40)

மூக்குலங்க ளுண்டென்ன முன்னே மொழிந்ததனால்
அக்குலங்கள் மூன்றும் அனற்குலமென் - றொக்க
வுரைத்தாம் தரைப்பால் ஒளிரங்கி கண்டம்
புரப்போர் அழற்குலத்தார் போற்று. (41)

பாரத்து வாசன் பயந்த துரோணசுதன்
ரேசுவத் தாமன் சிறுமகவாய்ப் - பாரில்வந்த
பல்லவ வேந்தன் பழியில் மரபுதித்த
எல்லவரும் வன்னியரென் றெண். (42)

சிவபால னென்றெவருஞ் செப்பு முனிவன்
தவச்சாலை யோரரம்பை சார்ந்து - கவர்மயலால்
அம்முனிவன் தன்னை யணைந்தாள் அவர்க்குதித்த
செம்மலே பல்லவனுஞ் சேய். (43)

மெல்லென் இளந்தளிரின் மேன்மகலை வைத்தமையாற்
பல்லவனென் றேநாமம் பன்னினார் - வல்லவன்றன்
சந்ததியா ராண்ட தரைநாமம் காஞ்சியாம்
இந்தயுகம் தன்னிலென்றே யெண். (44)

மட்டாருந் தார்வேந்தர் மாநிலத்தி லோங்கியநாள்
எட்டாகும் நூற்றாண் டெனப்புகல்வார் - சிட்டர்புகழ்
ஆரூரன் காலத் தருகியதென் றன்னவன்சொல்
சீராகக் காட்டுந் தெளி. (45)

பல்லவர்கள் வேறு பகைவரைக்கொல் மன்னரினம்
அல்லரவர் என்னும் அநுமானம் - ஒல்லைவிடு
நாயன்மார் ஆழ்வார் நவின்றதிரு வாசகத்தால்
தாயமுறு சத்திரியர் தாம். (46)

செம்பியர்கள் சம்பந்தம் செப்புதலாற் காவியங்கள்
நம்புறவே போற்றும் நலத்தாலும் - கம்பமிலாச்
சாசனங்க ளித்தைக்குஞ் சான்றுபகர்வதால்
வாசமலர் வேந்தரெனல் மாண்பு. (47)

பல்லவரே யிக்காலப் பள்ளிகளென் றோதினான்
சொல்லும்ஆப் பர்ட்டென் றுரைமகன்றான்-அல்லவெனில்
ஆதாரம் காட்டி யதைமறுக்க வல்லுநர்கள்
மீதானத் தும்மிகத்தும் இல். (48)

பல்லவ வேந்தர் பணித்திட்ட ஆலயங்கள்
கல்லதிசை யின்றுவரை நண்ணவே - தொல்லையார்
காஞ்சிமா நந்திபுரம் கார்மகா பல்லவத்தும்
வாஞ்சையுற வைத்தார் மதி. (49)

ஆயிரக்கால் மண்டபமும் அம்பள்ளி கோபுரமும்
மாயனெனும் வைகுண்ட மாற்றளியும் - நேய
விராசசிம்ம பல்லவனு றீச்சுரமும் பல்ல
வராயரது கால வளம். (50)

சாற்றுமிவ ரல்லால் சளுக்கியநா மத்தரசர்
ஏற்றமிகு வேள்வி பெழுந்தவர்கள் - போற்றுகின்ற
அங்கி புதல்வர் அனற்குலத்தார் வேள்புலத்தார்
தங்களையும் வன்னியராய்ச் சாற்று. (51)

இட்ட வரச ரிலாமையினுன் மாமுனிவர்
துட்ட வசுரர் தொழிற்கஞ்சிக் - கட்டமுடன்
விந்த கிரியில் விளங்குமபு மேன்மலையில்
மைந்தருறச் செய்தார் மகம் (52)

அம்மகத்தில் நால்வர் அரன்பிரம னிந்திரன்மல்
தம்மமிச மாகச் சனித்தனரால் - செம்மைச்
சளுகன் புரியாரா சர்பிரமார் கோகான்
நலகுமரர் நாமமென நாடு. (53)

கோக னரக்கர் குலத்தை யறவொழித்து
மாகர் முனிவரல்லல் மாற்றினுன் - போகமுறு
நால்வரினம் உத்தரத்து நாற்றிசையு மோங்குமால்
மேலிவர்கள் வன்னியரே மெய். (54)

சளுகன் மரபார் சளுக்கியரென் றெல்லாப்
புலவர்களும் நூல்கள் புகன்றூர் - சொலுமிவர்கள்
பல்லவர் மாட்டும் பகர்செம் பியர்மாட்டும்
புல்லுமணங் கொண்டார் புகுந்து. (55)

சொல்பேத மைந்துந் தொகையார் குடிப்பெயராம்
செல்கோத் திரங்கள் தெரிக்குங்கால் - நல்லொளிசேர்
ஆங்கீ ரசமே அனற்புதல்வர் தம்பெயரே
ஒவ்ருபா ரத்வாசமோர். (56)

பெற்ற குடியே பிரவாமு மென்றுரைப்பர்
முற்றும் பிரவாஞ்செய் மன்னனர்தங் - குற்றமிலாச்
சூத்திரங்கள் போதா யனமுதலாச் சொற்றவைகள்
சாத்துமறைச் சாகையெலாந் தான் (57)

வன்னிமன் னர்க்கு வழங்கும்பட் டப்பெயர்க
ளுன்னிடினும் வேந்தரென்ப தொக்குமே - மன்னுமவர்
மீது கவிஞர் விளம்பியநற் காவியங்கள்
ஓதுந் திறமுமதே யோர். (58)

நாயகர் கோலால் நடத்துபவர் பல்லுயிரை
நாயனர் சொல்லும் கவிலிறையே - தாயமுறு
சாமந்தர் சேனு பதிகளெனச் சாற்றுமுரை
ஏமமுறும் பள்ளி யிறை. (59)

பள்ளியெனுஞ் சொல்லைப் பரியாலோ சிக்குங்கால்
கள்ளமற மன்னருத்தம் காட்டுமே - பள்ளிப்பேர்
பாலா வெனும்பகுதி தோன்றியதாற் பல்லுயிரைச்
சாலப் புரப்பவர்க்கே தான். (60)

மலைநாட்டிற் பள்ளியென மன்னவனை யின்றும்
தலையால் வணங்கியே சாற்றும் - நிலையதுதான்
பள்ளிவாள் வேட்டை படைவாசல் சேகமெனும்
வெள்ளை மொழியால் வெளி. (61)

படையாட்சி நாமம் படைகட் குரியோன்
தடையில்லை வன்னியர்க்கே சாற்றும் - உடையரென
மற்றொருவர் சொற்றால் மகிமையிலை வன்னியரே
யற்றமிலாத் தார்மன்ன ரால். (62)

வன்னியர்க் கின்னும் வழங்கும் பெயர்களெலாம்
மன்னருத்தங் கொள்ளலலான் மற்றில்லை - அன்னியமாய்க்
கற்றவர்கள் கொள்ளக் கணக்கில்லை கொண்டிடுவோர்
மற்றவர்க ளென்றே மதி. (63)

கம்பநா டப்பேர் கவியரசு வன்னியர்மேல்
செம்பொற் சிலையெழுப தென்னுநூல் - அம்புதொடு
வில்லின் சிறப்பாய் விளம்பியதை யாராயின்
சொல்லுமவர் சாதிச் சுபம். (64)

மன்னவர்க்கு வில்லை மறையோர்க்கு வேதத்தைப்
பின்னவர்க் கேரைப் பெருவணிகர்க் - குன்னும்
துலாக்கோலைப் போற்றித் துதித்தல் கடனும்
கலாப்பண் டிதக்கவிஞர் கட்கு. (65)

செம்பொற் சிலையெழுப தென்னூந் திறல்நூலை
அம்புவி யாளு மடையாளம் - நம்புறவே
பாவேந்தன் பாடியதால் பார்ப்போர்க் கிலங்குமே
மாவேந்தர் வன்னியராம் மாண்பு.

பாராளச் செங்கோலைப் பற்றுங்கை யென்றுதித்
தோரும் வன்னியர்க ளின்னிசையைச் - சீரார்
இருவாட்சி நாம னிசைத்தா னொருநூல்
திருக்கை வளமெனவே தேர்.

மூவேந்தர் சந்ததியார் முன்னுள்போ லின்னாளும்
பூவேந்த ராகப் பொலிகின்றார் - மாவேந்தாய்
முற்றரசு கொண்டு முயங்கா விடினுமிவர்
சிற்றரசு பெற்றுளார் தேர். (68)

சிற்றம் பலத்தைத் திகழ்கனக மாக்கியருள்
பெற்ற கனகவர்ம்மப் பெம்மானின் - குற்றமிலா
எச்சத்தான் சூரப்ப சோழன் எனுநாமன்
பிச்சபுரம் ஆளும் பிரான். (69)

மற்றவ னுக்கு மகுடாபி டேகமங்ஙன்
இற்றைச் சிலநாண்முன் னெய்தியதே - யற்றமிலாக்
காட்சியாம் வன்னியர்கள் காவலர்க ளென்பதற்கத்
தாட்சிவேண் டாவேறு தான். (70)

முன்னாள் உறையூர் முறைபுரிந்த சீர்வளவர்
இந்நாள் அரியலூர் எய்தினர் - மன்னுமவர்க்
கின்னும் திருவானைக் காவரங்கத் தின்பவண
மன்னுதலும் வன்னியர்க்கே மாண்பு. (71)

பற்றும் புகழ்உடையார் பாளையத்தார் பல்லவராய்
அற்றமின்றிக் கச்சிநக ராண்டவர்கள் - மற்றவர்கட்
கிற்றைக்குங் காஞ்சிவாழ் ஏகாம் பரர்கோயிற்
பற்றதினால் வன்னியர்க்கே பண்பு. (72)

நல்லார் நினைக்கமுத்தி நல்கூர் திருவருணை,
வல்லாள ராயன் வரமகவாய் - எல்லாம்
உடையவருள் ஈசன் உதித்ததிரு வின்றும்
கடைகருமஞ் செய்தலே காட்சி. (73)

ஏழா யிரம்பண்ணை யேற்றுச் சிவகிரியில்
வாழாநின் றூர்கள் வருதிமன்னர் - தாழாத
நெல்வேலி நீணகர்ப்பன் னீரா யிரம்பண்ணை
புல்லுவோன் சோழப் புமான். (74)

ஆரூர் தியாக ரஜைத்தமுசு குந்தனர்
பேரூருஞ் சந்ததிகள் பிற்றையினில் - ஆரூர்த்
திருக்கோயில் நாயகராய்ச் செப்பும் பழமை
வருக்கமுறு வன்னியரே வாழி. (75)

கண்ணுதலென் றீசனொரு காரணப்பேர் கொண்டவிதம்
கண்ணுதலி லுள்ளதனிக் காரணமே - கண்ணுதலும்
அங்கி வடிவமா மாதலினா லும்முலகில்
அங்கி குலமே யழகு. (76)

ஈசன் வடிவமு மீசனடு நாட்டமும்
ஈசன் றிருக்கை யிலகுவதும் - ஈசன்
புரமெரித்த புன்னகையும் பொங்குதழ லாதல்
வரமுடைத்து வன்னி மரபு. (77

மண்டு முடலில் வைச்வாந ராக்கினியாய்
உண்டவன் னத்தை யுறுப்புகட்குக் - கொண்டு
பரிப்பதுவும் ஊழிதனில் பானுவுடன் கூடி
யெரிப்பதுவும் வன்னி யிறை. (78)

பூசுரர்க ளெஞ்ஞான்றும் பூசிப்பது தழலே
பேசுமவர் யாகம் பெருந்தழலே - காசினியை
யாக்குவதும் காப்பதுவும் அஞ்சப் பிரிதலினாற்
போக்குவதும் வன்னியே போல். (79)

ஆதலால் வன்னிகுலம் ஆதித்த னிந்துவழி
யோது மரபி[illegible]யர்ந்ததாம் - நீதமொடு
பானுவாற் [illegible]னும் பாவகனாற் சூரியனும்
பானமு[illegible]ப்பு. (80)

170382

அவனிதனில் மன்னரின மற்றதென்று பேதை
எவனோ வெழுதியதைப் பெண்ணிக் - கவனமுடன்
தாழ்ந்தோர் பலரத் தகைமரபு யாங்களெனச்
சூழ்ந்தார் மதியின்றிச் சொல். (81)

சாணர் படவர் தறியிடையர் மேல்வணிகர்
வீணாய்க் குலத்தை விசேடித்து - நாளும்
பொய்க்கதைகள் கட்டிப் புலம்புவது கண்டோமே
மெய்க்குலம்போ லேறே மிகை (82)

கட்டுப்பா டும்மோர் கதையும் புராணமென
மட்டு மிருந்தால் மதிப்புளதாம் - அட்டமியில்
எண்கலையார் சந்திரனுக் கிரண் கலையென்றால்
கண்ணிருந்தார் ஒப்புவதும் காலம். (83)

வாழி மறைமுதல்வன் வாழி மறைக்குடியோர்
வாழி மறைகாக்கும் வன்னியர்கள் - வாழி
யவர்புகழுக் கேற்ற வலங்கலா மிந்நூல்
தவர்முனிவர் விண்ணவருந் தான். (84)

முற்றிற்று.